மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாலை அணிவிப்பு!

# அன்பில் பொய்யாமொழியின் 27 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## திருச்சி மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் அறிவிப்பு!

திருச்சி, ஆக. 28 –

திருச்சி மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் அறிக்கை வருமாறு:

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வரும், தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளில் இருந்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவருமான, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான, அன்பில் பொய்யாமொழி அவர்களின் 27 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, மாவட்ட கழக அலுவலகத்தில், அவரது திருவுருவப் படத்திற்கு இன்று (28.08.2026) காலை 8.00மணி அளவில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கழக நிர்வாகி களுடன் மாலை அணிவித்து மரியாதையை செலுத்தப்படுகின்றது.

அதனை தொடர்ந்து கீழ்கண்ட இடங்களில் அன்னதானம் நடைபெறுகின்றது. மலைக்கோட்டை பகுதி காலை 8.00 மணிக்கு விடிவெள்ளி மாற்றுத்திறனாளி பள்ளி சித்திரம் பேருந்து நிலையம்,

மார்கெட் பகுதி காலை 8.20 மணிக்கு இ.பி. ரோடு முதியோர் இல்லம், பாலக்கரை பகுதி காலை 8.30 மணிக்கு TELC பள்ளி கெம்ஸ் டவுன், கலைஞர் நகர் பகுதி காலை 8.45 மணிக்கு விழியி ழந்தோர் பள்ளி மன்னார்புரம், பொன்மலை பகுதி காலை 09.00 மணிக்கு பறவை பவுண்டேஷன் எம்.ஜி.ஆர். நகர் கொட்டப்பட்டு, அரியமங்கலம் பகுதி மதியம் 12.30 மணிக்கு சங்கிலியாண்ட புரம், மாநகர கழகம் சார்பில் மதியம் 12.40 மணிக்கு தஞ்சை ரோடு பால்பண்ணை மாநகர கழக அலுவலகம்,

காட்டூர் பகுதி மதியம் 12.50 மணிக்கு அந்தோணியார் கோவில் முதியோர் இல்லம் காட்டூர்,

திருவெறும்பூர் பகுதி மதியம் 01.00 மணிக்கு திருவெறும்பூர் பேருந்து நிலையம் .

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமை செயற்குழுபொதுக்குழு உறுப்பினர்கள்,பகுதி,ஒன்றிய,நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் தொண்டர்கள் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு மாநகர கழக செயலாளர், மு.மதி வாணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# லடாக்கில் ராணுவ போர் பாராசூட் பரிசோதனை வெற்றி!

லே (லடாக்), ஆக. 28 –

லடாக் யூனியன் பிரதேசத்தில் உள்ள லே மாவட்டத்தில், உலகின் மிக உயரமான பகுதி ஒன்றில் இருந்து பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) உருவாக்கிய ராணுவ போர் பாராசூட் அமைப்பு நேற்று முன்தினம் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

கடல் மட்டத்திலிருந்து 22,000 அடி உயரத்தில், மைனஸ் 15 டிகிரி செல்சியஸ் கடும் குளிரில் டிஆர்டிஓ தயாரித்த ராணுவ பாராசூட் செயல்பாடு குறித்து சோதனை நடத்தப்பட்டது. ஏடிஆர்டிஇ அமைப்பின் தலைமைச் சோதனையாளர் விங் கமாண்டர் ராகுல்ஜா, முதன்மை வாரண்ட் அதிகாரிகள் ஆர்.ஜே.சிங் மற்றும் விவேக் திவாரி ஆகிய மூவர் இந்தச் சாகச பாராசூட் குதிப்பைச் செய்து காட்டினர்.

இதுகுறித்து டிஆர்டிஓ அமைப்பு எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ”லடாக்கில் உள்ள நியோமா, மூத் பகுதியில் இச்சோதனை நடைபெற்றது. 22,000 அடி உயரத்தில் இருந்து குதித்த சோதனைக் குழுவினர், இந்த ராணுவப் போர் பாராசூட் அமைப்புடன், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பாரா கம்ப்யூட்டர், ஆக்சிஜன் அமைப்பு மற்றும் சிறப்பு உடைகள் உள்ளிட்ட அனைத்துத் துணை அமைப்புகளையும் வெற்றிகரமாகப் பயன்படுத்தினர். 20,000 அடி உயரத்தில் பாராசூட் திறக்கப்பட்டு, கடல் மட்டத்திலிருந்து 13,700 அடி உயரத்தில் குழுவினர் பாதுகாப்பாகத் தரை யிறங்கினர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

மிகக் கடுமையான ஆர்டிக் கால நிலை நிலவும் உயரமான மலைப் பகுதிகளில், இந்த பாராசூட் அமைப்பின் செயல்திறன், நம்பகத்தன்மை மற்றும் ராணுவப் பயன்பாட்டுத்தகுதி ஆகியவை இச்சோதனை மூலம் நிரூபிக்கப்பட் டுள்ளதாகக் கூறியுள்ள டிஆர்டிஓ, இது பாதுகாப்புத் தொழில் நுட்பத் தில் சுயசார்பு இலக்கை மேலும் வலுப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## நேபாள பெருவெள்ளம்:

# 10 டன் நிவாரணப் பொருட்கள், மருந்துகளை இந்தியா அனுப்பியது!

புதுடெல்லி, ஆக. 28 –

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி நேபாள திபெத் எல்லைப் பகுதிகளில் சுமார் 100 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 750 பேர் மாயமாகி உள்ளனர். அவர்களில் 133 பேர் இந்தியர்கள். இந்நிலையில், பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்துக்கு 10 டன் நிவாரணப் பொருட்கள், மருந்துகளை இந்தியா அனுப்பி உள்ளது.

இதுகுறித்து இந்திய விமானப் படை எக்ஸ் சமூக வலைதளத்தில் ட்வீட் செய்துள்ளது.

அண்டை நாடான நேபாளத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தை தொடர்ந்து இந்திய வான்படை விரைந்து செயல்பட்டு சி130ஜே வானூர்தி மூலம் சுமார் 10 டன் நிவாரணப் பொருட்கள் மற்றும் மருத்துவப் பொருட்களை அனுப்பியுள்ளது.

இதோடு சி17 மற்றும் சி130 வானூர்தி மூலம் நிவாரணப் பொருட்களை அனுப்ப உள்ளோம். மேலும், மீட்பு பணிக்காக ஹெலிகாப்டர்களும் செல்கிறது என்று அந்த பதிவில் இந்திய விமானப் படை தெரிவித்துள்ளது.

அந்த நிவாரணப் பொருட்களும், மருந்துகளும் நேபாளம் சென்றடைந்தது. அதை இந்தியா அந்நாட்டு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளது. இதை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி செய்துள்ளார்.

நேபாளத்தில் நேற்று காலை 8.30 மணியளவில் ரசுவா மாவட்டத்தில் போட்டே கோசி ஆற்றில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

சற்றும் எதிர்பாராத நிலையில் ஏற்பட்ட இந்த திடீர் வெள்ளப் பெருக்கில் ஆற்றங்கரையோரத்திலிருந்த பல்வேறு கட்டிடங்கள், வாகனங்கள்,

ஆற்றின் குறுக்கே இருந்த பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டன. இதில் 100 பேர் உயிரிழப்பு என உறுதி செய்யப்பட்ட நிலையில், உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

'எதிர்க்கட்சி உறுப்பினர் பேசியதை அவை உரிமைக் குழுவுக்கு அனுப்பினால் – முதல்வர் பேசியதையும்

# அவை உரிமைக் குழுவுக்கு அனுப்புவதுதான் சட்டமன்ற மாண்பு!

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு விமர்சனம்!



நெல்லை., ஆக.28 -

முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

2021ல்தி.மு.க.ஆட்சிக்கு வந்ததும் அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனைப் படி பேரவை சார்பாக பல மாநில சட்டமன்றங்களுக்கு சென்று நேரடி ஆய்வு செய்தபின் கேள்வி நேரமும், முக்கிய நிகழ்வுகளும், முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பதிலுறைகளும் பேரவை விதிகள், மரபுகளுக்குட்பட்டு பேரவையின் மாண்போடு முதன் முதலில் சட்டமன்ற நடவடிக்கைகள் ஒளிபரப்பப் பட்டது.

மேலும் தி.மு.க. ஆட்சியில்தான் அனைத்து சட்டமன்ற உறுப்பினர் களுக்கும் கையடக்க கணினி வழங்கப் பட்டு காகிதமில்லா சட்டமன்றம் உருவாக்கப்பட்டது வரலாறு.1921 முதல் 2021 வரை சட்டமன்ற பதிவுகள் அனைத்தும் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப் பட்டு உலகின் எந்த மூலையில் இருந்தும் சட்டமன்ற பதிவுகளை தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்ததும் முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் என்பதுதான் சட்டமன்ற வரலாறு.

சட்டமன்ற நடவடிக்கைகள் முழுமையாக நேரலை செய்தால்,ஏதேனும் உறுப்பினர் கள் தவறுதலாக ஒரு கருத்தை பேசி அதன் மூலம் மக்களிடையே அமைதியின்மை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக நேரலையை 10 நிமிடங்கள் தாமதமாக ஒளிபரப்பலாம் என்றும் இது குறித்து எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பயிற்சியும் வழங்கி மு.க. ஸ்டாலின் அவர்கள் 2.0 ஆட்சியில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தான் கடந்த தி.மு.க. ஆட்சியின் நோக்கம்.

தற்போது அமைச்சர்கள் சட்டமன்றத்தில் மரபு மீறி பேசும் வார்த்தைகளை பேரவை தலைவர் அவை குறிப்பில் இருந்து நீக்கம் செய்த பின்பும், ஆளும் கட்சி நிர்வாகி ரீல்ஸ் உருவாக்கி சமூக வலை தளங்களில் வெளியிடப் படுவதை தடுப்பதற்காகவே 10 நிமிடங்கள் தாமதமாக ஒளிபரப்பு செய்ய வேண்டும் என்று தி.மு.க. ஆட்சியில் முடிவெடுக்கப்பட்டது.

பேரவைக்கு வெளியே எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.ஒருவர் முதல்வரை மிரட்டும் தொனியில் பேசி உள்ளது பேரவை சம்பந்தப்பட்ட விஷயம் என்று அவை உரிமை குழுவுக்கு அனுப்பலாம் என்று முடிவு செய்தால்,எதிர்க்கட்சி உறுப்பினர்களை பேரவைக்குள் வைத்து பூட்டுவேன் என்றும் கொத்து புரோட்டா போட்டு விட்டேன் என்றும்,Dash Dash என்று முதல்வர் பேரவைக்கு வெளியே மிரட்டியதும் அவை உரிமை குழுவுக்கு அனுப்புவது தான் சட்டமன்ற மாண்பு.

6 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா விஷயம் நீதிமன்றத்தில் இருக்கிறது. என்றால் தி.மு.க.எம்.எல்.ஏ.பேசிய விஷயமும் நீதிமன்றத்தில் இருக்கிறது. என்று இரண்டையும் ஒரே நிலையில் பார்ப்பதற்கு பதிலாக ஒன்றை ஏற்பதும் மற்றொன்றை நிரா கரிப்பதும் பேரவை மாண்பல்ல.

எதிர்க்கட்சியினர் முன்வைக்கின்ற பொதுநலம் சார்ந்த கேள்விகளுக்கு அமைச்சர்கள் நேரடியாக பதில் அளிக்க இயலாமல் வரம்பு மீறி தகாத வார்த்தைகளை பயன்படுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்களை வம்புக்கு இழுக்கும் போது எதிர்க்கட்சியினர் பயன்படுத்தும் வார்த்தைகள் மட்டும் பூதாகர மாக்கப்படுவதை தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.

10-ம் வகுப்பு தேர்ச்சி முதல் பட்டப் படிப்பு முடித்தவர்கள் வரை

# அரசு போட்டித் தேர்வு பயிற்சி மையத்தில் சேர விண்ணப்பிக்கலாம்!

## தமிழ்நாடு அரசின் பயிற்சித்துறை அறிவிப்பு!

சென்னை, ஆக. 28 -

சென்னையில் உள்ள அரசு போட்டித் தேர்வு மையங்களில் இலவச பயிற்சியில் சேருவதற்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவு நேற்று முன்தினம் தொடங்கியது.

இதுதொடர்பாக தமிழக அரசின் பயிற்சித் துறை தலைவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு:

டி.என்.பி. எஸ்.சி, எஸ்.எஸ்.சி., ஆர்.ஆர்.பி., ஐ.பி.பி.எஸ். ஆகிய தேர்வு வாரியங்கள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் தமிழகத் தேர்வர்களுக்கு சென்னையில் உள்ள அரசு போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களில் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது.

பழைய வண்ணாரப் பேட்டை சர் தியாகராஜர் கல்லூரி மையத்தில் 500 பேர், சேப்பாக்கம் மாநிலக் கல்லூரி மையத்தில் 300 பேர் பயிற்சி பெறலாம்.

இதற்கான வகுப்புகள் வார வேலை நாட்களில் தினமும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

பயிற்சிக் காலம் 6 மாதங்கள். 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் முதல் பட்டப் படிப்பு முடித்தவர்கள் வரை சேரலாம். எஸ்எஸ்எல்சி மதிப்பெண், இடஒதுக்கீடு அடிப்படையில் சேர்க்கை நடைபெறும்.

உணவு, தங்கும் வசதியை விண்ணப்பதாரர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

இப்பயிற்சியில் சேருவதற்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவு 26ம் தேதி (நேற்று) தொடங்கியுள்ளது.

விண்ணப்பிக்க கடைசி நாள் செப்.16ம் தேதி. கூடுதல் விவரங்களை www.cecc.in என்ற இணையதளத்தில் விரிவாக அறிந்துகொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




